முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1285

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.04.2023, வியாழக்கிழமை

1. அறம்வேலிகொண்ட அண்ணலே
ஆற்றல்பட தர்ம சேவையாற்றும்
வரம் கூட்டி உலகோர்க்கு ஞானம் அருளும்
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 23 ம் நாள், 06.04.2023, வியாழக்கிழமை)
இனிமைபட உலகோருக்கு ஞானம் ஊட்டி
எங்கும் பசிபிணி விரட்டிக் காக்கும்
3. காக்கின்ற மாதவபலம் கொண்ட
கருணைமிக்க அரங்கனே உன் சக்திக்கு
ஆற்றல்பட ஆறுமுகன் வலுகூட்டி ஐயமற உன்வழி தீட்சைபெறும்
அன்பர்கட்கு அதிபலம் தந்தருள்வேன்
4. அருளவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே கலியில் உயர்ந்த தர்மம்
வரமென உன்வழி இன்னும் உலகம்
வலம்வந்து பெருந்தர்மம் காத்துவர
5. வருகவே உலகமாற்றமாக வையகத்தில் அரங்கன் சக்தி வெளிப்பட்டு
வெளிப்பட்டு அன்பர்கள் மூலமாக வின்னுலகம் வியக்க இனிதே
மண்ணுலகம் ஞான ஆட்சிக்காலம்
மகத்துவம்பட பெற்று சிறக்க நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கன் வழிவந்தால்
நீதிமான்கள் எனும் சக்தி எங்கும்
வறுமைவிரட்டி காக்கும் வண்ணம்
வல்லமைபட பெருகி ஆற்றல் கூடும்

7. கூடவே அரங்கனுள் யானிருக்க
குரு அரங்கன் கரம்பட தீட்சை பெறுபவர்க்கெல்லாம்
முருகப்பெருமான் என் அருளும் தயவும்
முழுமைஞானமும் உண்டுஉண்டு
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—